# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 40வது கூட்டறிக்கை 2021.06.15

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 40வது அமர்வு 2021.06.15 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.எம்.எம். நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 06. திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 07. திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 13. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 18. ஜனாப்.வை.பீ.எம்.முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 19. திருமதி.கே.குலமணி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. செல்வி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**
பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 40வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

இவ் அமர்வின் முதல் அம்சமாக சென்ற மாத கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். திருத்தங்கள் இருந்தால் கூறலாம். இல்லாவிட்டால் ஒருவர் ஆமோதிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, திருத்தங்களை எழுதிக் கொடுத்திருக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அந்த திருத்தங்களை உள்வாங்கியவனாக,

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

கூட்டறிக்கை திருத்தங்களுடன் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்களே, சென்ற 8ம் திகதி சபை அமர்வு நாம் தீர்மானித்து இருந்தும் எனது தாயாரின் இறப்பினால் அது பிற்போடப்பட்டது. அந்த நிகழ்வில் எனக்கு எல்லா விதத்திலும் உதவிய கௌரவ உறுப்பினர்கள், சபையின் ஊழியர்கள் எல்லோருக்கும் நன்றி கூறியவனாக, இன்று நாட்டின் நிலமை குறிப்பாக நமது ஊரின் நிலமை மிகவும் ஆபத்தான நிலையை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது. சட்டங்கள் அமுலாக்கப்பட்டும், நாம் அறிவித்தல் கொடுத்தும் மக்கள் அதை செவிமடுக்காமல் விரும்பியவாறு அலைந்து திரிவதனால் ஒரு போதும் இல்லாதவாறு நமது ஊரில் கொவிட் - 19 பரவல் அதிகரித்துக் கொண்டு வருகின்றது. இதனால் வரும் விளைவுகளை தாங்கக்கூடிய சக்தி அல்லது வசதிகள் நமது ஊரில் இல்லை. அந்த தொற்று அதிகரித்து ICU Bed தேவைப்படும் கட்டத்திற்கு வந்தால் நிச்சயமாக எம்மிடமும் அந்த வசதிகள் இல்லை. நமக்கு உதவக்கூடிய இடங்களிலும் அந்த வசதிகள் இல்லை. அதனால் மக்களுக்கு இதை விளங்கப்படுத்தி முன்னுதாரணமாக இருந்து இவர்களை வழிநடாத்த வேண்டிய கடமை மக்கள் பிரதிநிதிகளாகிய நமக்கும் அது வந்து சேரும். இன்று கூட நான் வரும் போது நமது வாகனத்தை MOH Office இற்கு அனுப்பிய காரணம் PHI, இராணுவ உத்தியோகத்தர்களும், சிவில் உறுப்பினர்களும் ஊரை ரோந்து செய்வதற்கு தயாராக இருக்கும் போது வாகனம் ஒன்று பற்றாக்குறை என்று நமது வாகனத்தை அனுப்பி இருக்கின்றோம்.

இராணுவத்தை ஊருக்குள் எடுப்பது பெரிய விடயம் அல்ல. அதை நான் உங்களின் தவிசாளர் என்ற ரீதியில் தாமதித்து வருவது அதனால் வரும் விளைவுகள் பாரதூரமாகுமானால் அது வேறொரு திசையில் போகலாம் என்ற அச்சத்தினால்தான். இதில் நீங்கள் எல்லோரும் கவனம் செலுத்தி இதற்கு மாற்றுவழி எதுவும் இருக்கின்றதா? எவ்வாறு மக்கள் நடமாடுவதை குறைக்கலாம்? அரசும் பொருளாதார நடவடிக்கைகள் சகலதும் நடக்க வேண்டும் என்ற படியினால் வீடுகள் கட்டப்படுகின்றது, கடைகளில் மறைமுகமாக வியாபாரம் செய்யப்படுகின்றது. விவசாயிகள் தினமும் வயல்களுக்கு போவதும், வருவதும். அந்தப் போர்வையில் பலர் ஊருக்குள் சுற்றுவதும். இவை நடக்க வேண்டுமானால் அதற்குள்ளும் ஒரு கட்டுப்பாடு இருக்க வேண்டும். குழந்தைகளை கூட்டிச் செல்வதும் சாதாரணமாக நடந்து கொண்டிருக்கின்றது. இதை கட்டுப்படுத்த வேண்டிய கடமை நமக்கு இருக்கின்றது. தற்போது அம்பாரை மாவட்டத்திற்கு தடுப்பூசி வந்திருக்கின்றது. அதில் ஒரு தொகை கல்முனை பிராந்தியத்திற்கும் வரும். அவ்வாறு வருகின்ற போது சுகாதார உத்தியோகத்தர்கள் 60 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கு முதல் வழங்க வேண்டும் என்று தீர்மானித்து கேட்டிருக்கின்றார்கள். நாம் எழுத்து மூலம் முன்னுரிமைப்படுத்தி இருப்பது சுகாதாரத் தொழிலாளிகள். ஆனால் இன்று அரசு எடுத்திருக்கின்ற முடிவு 60 வயதிற்கு மேற்பட்டவர்கள். அதிலும் வேறு வியாதிகள் இருப்பவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது.

சஹ்ரானின் தாக்கத்தில் இருந்து இன்று வரைக்கும் நமது வருமானத்தில் பாரிய வீழ்ச்சி கண்டிருக்கின்றோம். இவ்வளவு காலமும் நிதி முகாமைத்துவத்தினை இறுக்கமாக கடைப்பிடித்து வந்ததனால் மற்ற சபைகளைப் போல் இன்று நான் கேள்விப்பட்டேன் கல்முனை மாநகர சபை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு கடன் எடுத்ததாக, அந்த நிலை இந்த சபைக்கு வரக்கூடாது என்றுதான் 2011 ஆம் ஆண்டில் இருந்தே அந்த உறுதியான ஒரு இறுக்கப்பாட்டோடு செயற்பட்டு வந்ததால் நமது நிதி நிலமை அந்த நிலைக்கு வரவில்லை. ஆனால் இன்று இந்த வருடத்தில் நாம் கணித்த தொகையில் இருந்து 30% தான் வருமானம் பெற்றிருக்கின்றோம். சபையின் வருமானம் 05 மாதங்களுக்கும் 26.2 மில்லியன் வந்துள்ளது. அதில் 11 மில்லியன் தண்டப் பணத்தினால் வந்தது. ஏனைய 15 மில்லியன் தான் நமது வருமானங்களில் இருந்து வந்தது. சென்ற மாதத்தின் முழு வாடகையும் கழிவாக கொடுக்க வேண்டி வரும். தற்போதய கையிருப்பு ஏறத்தாள 14 மில்லியன் ஆகும். மாதாந்தம் நமக்கு நிரந்தரமற்ற ஊழியர்களுக்கும், சபையை நடாத்தும் செலவுகளுக்கும் ஏறத்தாள 4.3 மில்லியன் மாதாந்தம் தேவைப்படும். வரவு செலவுத்திட்டம்

தயாரிக்கும் போது நான் விளங்கப்படுத்தினேன் 92 தற்காலிக ஊழியர்கள் 180 நாள் கூடியவர்கள் 06 மாத காலத்திற்குள் நிரந்தரமாக்கப்படாவிட்டால் நமக்கு ஊதியம் கொடுப்பது ஒரு சர்ச்சையாக வரும் என்று, அந்த நிலை படிப்படியாக உருவாகிக் கொண்டு வருகின்றது. அதனால் ஜனவரி மாதமோ அதைப் பற்றி ஆளுனருக்கு எழுதி இருந்தோம் இவர்கள் நிரந்தரமாக்கப்படாவிட்டால் சபைகளுக்கு நிர்வாகம் செய்வதற்கு ஒரு பிரச்சினையாக வரும் என்று, மீண்டும் அதை நினைவு கூற வேண்டிய அவசியம் ஏற்பட்டு இருக்கின்றது.

நமது திண்மக் கழிவு ஒரு அத்தியவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அப்படியானால் அவர்களுக்கு சம்பளம் கொடுக்கின்ற பிரச்சினை ஒன்று இருக்கின்றது. நமக்கு ஆகக் குறைந்தது 04 மாதம் கொண்டு செல்லக்கூடிய பண நிலமை இருக்கின்றது. ஆனால் வேறு ஏதாவது அத்தியவசிய செலவுகள் வந்தால் அது குறைந்து கொண்டே செல்லுமே தவிர கூடக்கூடிய வாய்ப்புகள் இல்லை. தற்போது நமது புது வளத்தாப்பிட்டியில் நமது ஊழியர்கள் 12 தற்காலிக ஊழியர்களும், 03 நிரந்தர ஊழியர்களும் முடக்கப்பட்ட நிலையில் இருக்கின்றார்கள். தற்காலிக ஊழியர்கள் வேலைக்கு வராவிட்டால் நமக்கு சட்டப்படி சம்பளம் கொடுக்க இயலாது. ஆனால் தீர்மானங்கள் எடுக்கின்ற போது விசேடமாக அந்த நிலையை கருதி அவர்களது சேவை இந்த சபைக்கு எவ்வளவு முக்கியம் என்ற வகையில் அவர்கள் வேலைக்கு வந்ததாக கருதி சம்பளம் கொடுப்பதற்கு நாம் தீர்மானம் எடுக்க வேண்டியதாக இருக்கும். நமது செலவுகளில் எரிபொருள் விலை உயர்வினால் இன்னும் ஒரு வீதம் கூடும். அதனால் நிதி முகாமைத்துவத்தில் நீங்கள் எல்லோரும் எனக்கு ஒத்தாசையாக இருந்து நாம் கடன் எடுக்க வேண்டிய நிலைக்கு நமது சபை இருக்கக்கூடாது. ஏறத்தாள 10 வருடங்களாக இந்த சபை எந்த நிறுவனத்திடமும் நிதி உதவி நாடாமல் நடத்தி வந்த சபை. அந்த நிதி முகாமைத்துவம் செய்வதற்கு உங்கள் எல்லோரினதும் உதவியை நாடுகின்றேன்.

அடுத்ததாக மான்புமிகு ஜனாதிபதி அவர்கள் ஒரு இறுக்கமான முடிவு எடுத்திருக்கின்றார்கள். இரசாயனப் பசளை இனிமேல் இந்த நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படாது. இதில் மிகவும் பாதிக்கப்படுபவர்கள் நமது மக்கள். ஏனென்றால் நமது முதுகெலும்பு விவசாயம். அதை விமர்சிப்பதை விட அந்த தாக்கத்தை நாம் எப்படி முகங்கொடுப்பது என்பதுதான் நமக்கு இருக்கும் மிகப் பெரிய சவால். நான் ஏறத்தாள 50 வருடங்களாக விவசாயத்தில் ஈடுபட்டவன். இன்றய விவசாய முறைக்கு நாம் பாவிக்கும் விதைகளுக்கு பயளை எவ்வளவு முக்கியம் என்பது எல்லோருக்கும் தெரியும். யூரியா போடாவிட்டால் உற்பத்தி இல்லை. இரசாயனப் பசளையினால் வரும் யூரியா, நமது இயற்கையான Compost மூலமாக வரும் பயளைகளில் எடுப்பதானால் ஒரு ஏக்கருக்கு 02 Ton Compost தேவைப்படும். ஊர் குப்பையை சேர்த்து சராசரி 10 Ton தயாரிக்கின்றோம். அவ்வளவு தயாரிப்பதற்கு காரணம் நாம் பாவிக்கின்ற இயந்திர முறையினால் ஆகும். இயற்கையாக எல்லாவற்றையும் குவியலாக்குவது என்றால் 90 நாள் வேண்டும். நாம் அரைத்து எடுப்பதனால் ஒரு மாதத்திற்குள் Compost எடுக்கின்றோம். ஆனால் அந்த தொகையை கூட்டுவது என்றால் வீடுகளில் இருந்து எடுக்கின்ற கழிவுகளுக்கு மேலாக வைக்கோல், பச்சை இலைகளை கொண்டு வருவதற்கு எமது எல்லைக்குள் மேட்டு நிலங்கள் இல்லை. சம்மாந்துறை நிர்வாக எல்லைக்குள் கிளிசரிடீயா மருந்துக்கும் எடுக்க இயலாத நிலை. அது தவிர மாட்டெரு, கோழியெரு, ஆட்டெரு இவைகளுக்கு இருக்கின்ற கிராக்கி பயிர் செய்பவர்களுக்கு தெரியும். இவைகள் எல்லாவற்றையும் சேர்த்து நாம் தன்னிறைவு அடைவது என்பது தற்போது பாரிய சவால்.

கௌரவ ஆளுனர் சென்ற சனிக் கிழமை ஒரு Zoom Meeting வைத்திருந்தார். அதில் கருத்துகள் பரிமாறப்பட்டது. மேல் மட்ட ஆட்கள் எல்லோரும் இப்படி செய்யலாம், இப்படி எடுக்கலாம் என்று சொன்னார்கள். ஆனால் நடைமுறையில் எந்தளவு சாத்தியம் என்பது விவசாயிகளுக்குதான் தெரியும். அதனால் சம்மாந்துறை பிரதேச சபையும் ஒரு முன்மொழிவு செய்திருக்கின்றது. ஒரு கிலோ பசளை எடுப்பது என்றால் எத்தனை கிலோ கிளிசரிடீயா வேண்டும்? அதனை வைப்பதற்கு இடமும் இல்லை. அதனை வெட்டுவதற்கு இடமும் இல்லை. இப்படியான ஒரு சூழலுக்குள் இருக்கின்றோம். தற்போது நாடு இருக்கின்ற நிலமைக்கு சகலரும் ஒன்றுபட்டு பொறுப்புகள் எடுத்து செய்தால்தான் கொண்டு செல்லலாம். இல்லாவிட்டால் பாரிய சவால். தற்போது Compost Liquid Fertilizer இனை அறிமுகம் செய்யப் பார்ப்பார்கள். ஆனால் இவைகள் எல்லாம் எந்தளவுக்கு சாத்தியப்படும் என்ற ஒரு தெளிவில்லாத நிலையில் இருக்கின்றோம். இவை எல்லாவற்றையும் நீங்களும் உள்வாங்கி எனக்கு உதவ வேண்டும் என்ற பணிவான வேண்டுகோளை விடுத்தவனாக,

கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் இந்த சபைக்கு சமூகமளிக்க முடியாது என்று அறிவித்தல் விடுத்திருக்கின்றார். அவருக்கு விடுமுறை வழங்குவதற்கான அனுமதி.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |

சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, 500 பொதுப்பயன்பாட்டுச் சேவையில் அம்பாரை 14ம் வீதி S24 ம் வாய்க்கால் கல்வெட் அமைத்தல். இதற்கு 906,307.31 நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த டிசம்பர் மாதம் எமது சபையினால் இவ்வாறான வேலைகள் செய்வதற்காக கௌரவ உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. அவ்வாறு அமைக்கப்பட்ட குழு, குழு விஜயத்தின் போது இந்த கல்வெட்டை செய்வதற்கான எந்தவித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. அதே போன்று அந்த குழு விஜயத்தின் போது செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட 03 கல்வெட்கள் இருக்கின்ற வேளையில் இந்த கல்வெட்டை செய்வதற்கு அந்தக் குழு எவ்வாறு இதற்கு அங்கீகாரம் வழங்கியது?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இது குழுவிற்கு அப்பால் ஏற்கனவே அம்பாரை 14 இல் கௌரவ உறுப்பினர் சஹீல் அவர்கள் முன்வைத்தது. நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மூலமாக Estimate பெறப்பட்டு அது அனுமதிக்கப்பட்டது. அது சபையிலும் தீர்மானமாக எடுக்கப்பட்டது. அந்த குழு விஜயத்தின் போது செய்த சிபார்சுகளில் ஒவ்வொரு பகுதிகளிலும் எந்த வேலைகள் செய்யப்பட வேண்டும். எல்லாம் ஒரு வட்டாரத்தில் தேவைகள் இருந்தும் செய்யக் கூடாது என்றதனால்தான் இந்த வேலைகள் நடைபெற்றது. இதில் 02 வேலைகள் நடைபெற்றது. கௌரவ உறுப்பினர் ஜிப்ரி அவர்களின் முன்மொழிவில் விஷ வைத்தியர் வீதியில் ஒரு கல்வெட் செய்யப்பட்டது. இந்த வேலைகள் பரவலாக செய்யப்பட வேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் அது சபையின் அனுமதியோடு செய்யப்பட்டது. அதில் சர்ச்சைக்குரிய விடயம் இருக்க முடியாது என்று நினைக்கின்றேன். அதற்கு முன் நாம் சில வேலைகள் மல்காம்பிட்டி வட்டாரத்தில் மட்டும் ஏனென்றால் அந்த வட்டாரத்தின் தேவை இன்னும் 02 சபை இருந்தாலும் முடியாத விடயம். அதனால் இந்த வேலை சபையினால் அங்கீகரிக்கப்பட்டு செய்ததே தவிர எனது தனி முடிவில் செய்தது அல்ல.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே நான் உங்களின் தனி முடிவில் செய்ததாக கூறவில்லை. இதற்கு முன்பு ஏறத்தாள இன்று நாம் 40வது அமர்விலே அமர்ந்திரிக்கின்றோம். 37 அமர்வுகளிலே தென்னம்பிள்ளைக் கிராமத்திலே உடைந்த நிலையில் இருந்த ஒரு கல்வெட்டை செய்ய வேண்டும் என்று அதனை பார்வையிட்டும் கூட தற்போது செய்ய தேவையில்லை என்று முடிவு எடுத்தார்கள். சென்னல் கிராமம் 02 வைத்தியசாலை 3ம் குறுக்கு வீதியிலே இந்த ஒரு கல்வெட் அதனால் வைத்தியசாலைக்கு மக்கள் செல்லுகின்ற கல்வெட்டைக் கூட முதன்மைப்படுத்த முடியாத நிலையில் தான் அன்று அந்த குழு இருந்தது இதில் நியாயம் கேட்டார்கள். நியாயப்படுத்தினார்கள் அவ்வாறாக இருந்தால் இந்தக் கல்வெட்டை அமைத்ததிலும் என்ன நியாயம் இருக்கிறது.

எல்லா வட்டாரங்களிலும் வேலை செய்ய வேண்டும். எல்லா இடத்திலும் வேலை செய்ய வேண்டும் என்பதனை நான் ஏற்றுக் கொள்கின்றேன். அதில் எனக்கு எந்த விதமான ஆட்சேபனையும் இல்லை இதற்கு முன்பு நீர்ப்பாசன திணைக்களத்தினால் தீர்மானம் எடுக்கப்பட்டு அவர்கள் கொடுத்த அறிக்கையின் படி செய்யப்பட்ட Estimate இருக்கின்றது. இது செய்தவர்கள் கடந்த ஜனவரி மாதம் சென்னல் கிராமம் 2ம் பிரிவிலே Transformer வீதிக்கு மக்களால் நடக்க முடியாத ஒரு பாதைக்கு கட்டட உடைபாட்டுப் பொருட்களை கொண்டு போய் ஆகக் குறைந்தது சபையினுடைய நிதி 40,000.00 செலவு செய்வதற்கு நியாயம் கேட்டார்கள். என்னுடைய வட்டாரத்தில் வேலை செய்வது காழ்ப்புணர்ச்சியா? அல்லது இந்த சபை அங்கு செய்ய முடியாதா? இந்த சபையினுடைய நிதியை ஏழை மக்களுக்காக பயன்படுத்த முடியாதா? இதை நான் கேட்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அந்த காலகட்டத்தில் முக நூல் பதிவு ஒன்று செய்யப்பட்டிருந்தது. தார் வீதிக்கு இந்தப் பக்கம் தான் எல்லா அபிவிருத்தியும் நடக்கின்றது என்று, அது பிழை. நாம் கணக்குப் படி பார்த்தால் கிராம பகுதியில் தான் கூடுதலாக சபையின் பணம் செலவளிக்கப்படுகின்றது. மல்வத்தையாக இருந்தாலும் சரி வளத்தாப்பிட்டியாக இருந்தாலும் சரி எங்கு தேவை இருக்கின்றதோ அங்கு நடக்கின்றது. ஊருக்குள் நடப்பது பழுதடைந்த நிலையில் இருக்கின்றவைகள் தான். இதை வாதமாக எடுக்காமல் உங்களது கருத்தை உள்வாங்கி விட்டேன். இனிமேல் இந்த வாதங்கள் வரக்கூடாது.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 100 பொது நிர்வாகம் 9வது நகர அபிவிருத்தி அதிகார சபையின் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கான கொடுப்பனவு 15,000.00 ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் எத்தனை பேர் கலந்து கொள்கின்றார்கள்? அதற்குரிய கொடுப்பனவு எவ்வளவு?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஒரு அமர்வுக்கு எவ்வளவு என்று ஒரு அளவு இருக்கின்றது. அதன் விபரங்கள் தேவை என்றால் எடுக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 600 7வது LADP நிகழ்ச்சி திட்டத்தில் பங்கு பெற்றவர்களுக்கான தேனீர் உபசரணை செலவு 24,713.00 வழங்கப்பட்டுள்ளது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஒவ்வொரு குறிச்சியிலும் நடைபெற்ற வட்டாரங்கள் எல்லாவற்றுக்கும் சேர்த்து கொடுத்தது. அதன் விளக்கங்கள் தேவையானால் பெற்றுக் கொள்ளலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 600 14வது நோன்புப் பெருநாளை முன்னிட்டு மணிக்கூட்டு கோபுரம், ஹிஜ்றா பொதுச் சந்தை அதற்கான செலவு 35,000.00 அதனை எமது சபை கொள்வனவு செய்து வைத்திருந்தால் என்ன என்பதுதான் எனது கருத்து.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதை 2011ம் ஆண்டில் இருந்து விவாதிக்கின்றோம். அதில் பிரச்சினை என்னவென்றால் அதனை எடுத்து 6 மாதத்திற்கு பாவிக்காவிட்டால் அரைவாசி பழுதடைந்துவிடும் நான் முதல் யோசித்தது எடுத்து வைப்போம் என்று, அதற்கு பிறகு வீட்டில் ஒரு Set இருந்தது 3 மாதம் பாவிக்காததால் அரைவாசி வேலை செய்யவில்லை. கொள்வனவு செய்து பழுதடைவதை விட வாடகை கொடுத்து செய்வது இலாபம் என்ற ரீதியில் தான் செய்தது.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே 10m போட்டதற்கு 350.00 கூடுதலாக எடுப்பதானால் அதை இன்னும் குறைத்து எடுக்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீங்கள் எல்லோரும் சேர்ந்து சிபார்சு செய்தால் சபையால் வாங்கி வைப்பதற்கு ஒரு பிரச்சினையும் இல்லை. நான் அனுபவத்தில் தான் சொல்கின்றேன் அப்படியானவைகள் நீண்ட நாளைக்கு பாவிக்காவிட்டால் அது இயங்காது.

**தீர்மானம் - 04/40/01**
சென்ற மாதம் 2021.05.01 தொடக்கம் 2021.05.31 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்பர் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 2021.06.07 ஆந் திகதி மரணம் எய்திய எங்களது அன்னை M.A.உம்மு சல்மா அவர்களுக்கு மக்கள் பிரதிநிதி என்ற வகையில் அவர் மிக நீண்ட அரசியல் பிண்ணனியில் உள்ளவர். அதைப்பற்றி பேச வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதனை வேறு விடயத்தில் கதைப்போம்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சபைக்கு ஒரு கௌரவமாக ஒரு நிமிடம் உங்களது தாய்க்காக மௌன அஞ்சலி செலுத்த வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் அதனை அனுமதிக்கவில்லை. என் தாய் எனக்கு பெரிது. இந்த சபைக்கு இன்னுமொரு தாய். அதை நான் செய்ய விரும்பவில்லை. உங்களது உணர்வுகளை மதிக்கின்றேன். என் தாய் என்னோடு இருக்க வேண்டும். பதவிக்குள் வரக்கூடாது. நான் எப்பவும் அதில் தெளிவாக இருக்கின்றேன். M.A.அப்துல் மஜீட் வேறு விடயம். அவர் இந்த ஊருக்கு தலைவர். எனது தாய் விஷேசமான ஒரு தாய். சகோதரன் பாராளுமன்ற உறுப்பினர், துணைவன் பாராளுமன்ற உறுப்பினர், மகன் பாராளுமன்ற உறுப்பினர். அதை நீங்கள் கௌரவித்து பேசுவது வேறு விடயம். ஆனால் அதை ஒரு சம்பிரதாய ரீதியாக இப்படியானவைகள் செய்யும் போது அது வேறு கோணங்களில் பேசப்படும். உங்களுக்கு நான் நன்றி கூறியவனாக, அடுத்த விடயத்திற்குள் செல்வோம்.

## தீர்மானம் - 04/40/02

சபையில் தற்காலிக ஊழியர்களாக 18 மாதம் இருந்து 72 மாதம் வரை தொடர்ச்சியாக பணிபுரியும் தொழிலாளர்களை நிரந்தர ஊழியர்களாக உள்வாங்குவதற்கு கௌரவ ஆளுனருக்கு வேண்டுகோள் விடுத்தலும், கொவிட் - 19 இனால் ஏற்பட்டிருக்கும் நிதி நெருக்கடியினால் தவறும் பட்சத்தில் மாகாண சபையினால் அவர்களின் ஊதியத்தை மீளளிப்பதற்கு விண்ணப்பிப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/40/03

தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அவர்களுக்கு தேவையான Software களை நிறுவி அவர்களின் வேலைகளை இலகுவாக்குவதற்காக மடி கணனி மற்றும் தொடர்புடைய Software களை கொள்வனவு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/40/04

நிர்வாகப் பிரிவில் சபை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தும் Printer பழுதடைந்துள்ளதால் புதிய Printer மற்றும் வருமானப் பிரிவில் வரி இறுப்பாளர்கள் தொகை அதிகரிப்பதனாலும், அதே போன்று வியாபார அனுமதிப் பத்திரம் தற்போது கணனிமயப்படுத்தப்பட்டுள்ளதனாலும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 02 Dot Matrix Printer கொள்வனவு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

எமது சபையினால் PVC, Plastic, Plumbing போன்ற பொருட்களை கொள்வனவு செய்கின்ற போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் அத்துறை தொடர்பான தேர்ச்சி பெற்ற VTA இல் போதனாசிரியராக கடமையாற்றும் ஜனாப்: A.M.கபீர் அவர்களை நியமித்தல்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் கூறிய விடயம் AM. கபீர் என்ற போதனாசிரியக்கு எதாவது கொடுப்பனவு சபை மூலமாக செய்யப்படுகின்றதா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அவர் Plastic பொருட்கள் வாங்குவது என்று சபை தீர்மானம் எடுத்தால் அதற்கு தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழு தேவை. அந்த அமர்வுக்கு அவர் வர வேண்டும் அதில் பங்கு பற்றுவதற்காக ஒரு Allowance வழங்கப்படும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இதற்கு ஒரு Technician தேவையா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கட்டாயம் தேவை. தற்போது எல்லாவற்றுக்கும் Audit கேட்கின்றார்கள்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, தற்போது எல்லாப் பொருட்களுக்கும் SLS தரச் சான்றிதழ் இருக்கின்றது தானே?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அது இருந்தாலும் விலை மதிப்பீட்டுக் குழு மட்டுமல்ல, Purchesing குழு மட்டுமல்ல, TEC உம் கேட்கின்றார்கள். Plastic Bucket வாங்குவது என்றாலும் TEC சிபார்சு செய்தால்தான் வாங்கலாம். இல்லாவிட்டால் Audit Query வருகின்றது.

**தீர்மானம் - 04/40/05**

சபையினால் PVC, Plastic, Plumbing போன்ற பொருட்களை கொள்வனவு செய்கின்ற போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் அத்துறை தொடர்பான தேர்ச்சி பெற்ற VTA இல் போதனாசிரியராக கடமையாற்றும் ஜனாப்: A.M.கபீர் அவர்களை நியமிப்பதற்கான மற்றும் TEC வெளி அலுவலக உறுப்பினர்களுக்கு கொடுப்பனவு வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

முடக்கப்பட்ட பிரதேசமான புதிய வளத்தாப்பிட்டியில் இருந்து கௌரவ உறுப்பினர்களுக்கு Voice Cut வருகின்றது. அதாவது அட்டாளைச்சேனை சபை பொதிகள் கொடுத்திருக்கின்றது, நிந்தவூர் சபை பொதிகள் கொடுத்திருக்கின்றது, அம்பாரையில் இருந்து பொதிகள் கொடுக்கப்பட்டுள்ளது. சம்மாந்துறை பிரதேச சபை ஒன்றும் செய்வதில்லையா? என்று கேட்கின்றார்கள். இது நமக்கு

வழமையாக வருகின்ற குற்றச்சாட்டு. ஏனென்றால் நாம் அரசியல் செய்வதில்லை. இந்த சபையில் இருப்பவர்களும் ஊழியர்கள், முடக்கப்பட்ட பிரதேசத்தில் இருப்பவர்களும் ஊழியர்கள். அவர்களுக்கு இந்த சபை வேலைக்கு வரமுடியாத காரணத்தினால் வர முடியாத நாட்களை வந்த நாட்களாக கருதி சம்பளம் வழங்குவதற்கு நாம் ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும். அதற்கு மேலாக ஏதாவது செய்வது என்றால் என்னுடைய கருத்துப்படி மற்றவர்கள் வேலை செய்கின்றார்கள் சம்பளம் எடுக்கின்றார்கள். அவர்களுக்கும் சில கட்டுப்பாடுகள் இருக்கின்றது. இந்த ஊழியர்கள் எல்லோருக்கும் 02வது தொழில் இருக்கின்றது. 02 மணியோடு சென்று வேறு தொழில் செய்கின்றார்கள். தற்போது அந்த வருமானம் இல்லை. வளத்தாப்பிட்டியில் இருந்து 12 தற்காலிக ஊழியர்களும், 03 நிரந்தர ஊழியர்களும் வருகின்றவர்கள். நிரந்தர ஊழியர்களுக்கு எப்படியும் சம்பளம் கிடைக்கும். ஆனால் தற்காலிக ஊழியர்களுக்கு இந்த சபை விஷேடமாக தவிர்க்க முடியாத காரணத்தினால் சேவைக்கு வர விரும்பியும் வர முடியாத நிலையினால் அவர்களை வந்தவர்களாக கருதி அவர்களுக்கு சம்பளம் வழங்குவது. அதற்கு மேலாக சபை செய்வது என்றால் சகல ஊழியர்களுக்கும் செய்ய வேண்டும் என்பதுதான் எனது கருத்து. சென்ற கொவிட் காலத்தில் சுகாதார ஊழியர்களுக்கு கிழமைக்கு ஒரு மரக்கறி பொதி கொடுத்தோம். இதில் உங்களது கருத்துக்களை தெரிவிக்கலாம்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, அங்கு தொழில் செய்கின்ற நூறு வீதமானவர்கள் கடனைப் பெற்றுதான் வாழ்கின்றார்கள். சம்பளம் என்பது குறிப்பிட்ட அளவுதான் செல்கின்றது. நீங்கள் சொன்னமாதிரி இவர்களுக்கு வர முடியாததை கருதி வந்ததாக எடுத்தாலும் சுகாதார வேலைகள் செய்கின்ற அத்தனை ஊழியர்களும் கொவிட் - 19 பிரச்சினைக்குள்ளாலதான் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று எடுத்து வருகின்றார்கள். பொதுவாக இந்த கால கட்டத்தில் வேலை செய்கின்ற சபை ஊழியர்களுக்கு ஏதோ ஒரு வகையில் எங்களால் முடிந்த கொடுப்பனவை எல்லோருக்கும் வழங்க வேண்டும்.நாம் பிரதேச செயலாளருக்கு ஒரு சிபார்சு செய்ய வேண்டும். தொழில் இருப்பவர்களை கணக்கெடுக்காமல் தொழில் அற்றவர்களுக்கு பொதி கொடுக்கின்ற மாதிரி இருக்கின்றது. ஆனால் உண்மையாக தொழிலில் இருக்கின்றவர்களுக்கும் மிகவும் கஸ்டமாக இருக்கும். அதில் 90% வீதமானவர்கள் கடன் பெற்று குறைந்த சம்பளத்தில் வாழ்கின்றார்கள். அவர்களும் இதில் முடக்கப்பட்டு இருக்கின்றதை நாடி அவர்களுக்கு ஏதாவது பொதி கொடுக்க வேண்டும் என்று பிரதேச செயலாளருக்கு அறிவிக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நமது தற்காலிக ஊழியர்கள் அனைவருக்கும் தொழில் இல்லாததாக கருதி பிரதேச செயலகத்தினால் பொதி கொடுக்கப்பட்டு இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் கே.குலமணி அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, பொதிகள் சமுர்த்தி அலுவலகமும், பிரதேச செயலகமும் சேர்ந்து தான் பொதிகள் கொடுத்தது. எமது பிரதேச சபை ஊடாக ஒன்றும் வழங்கவில்லை என்றுதான் அவர்கள் கூறுகின்றார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இதில் பிரதேச சபை எதுவும் கொடுக்க வேண்டும் என்று சட்டம் இல்லை. அரசாங்கம் அதற்கு ஒதுக்கீடு செய்து தொழில் செய்பவர்களுக்கு கொடுக்கவில்லை. ஆனால் நாங்கள் அவர்களிடம் அங்கு இருப்பவர்கள் தற்காலிக ஊழியர்கள். அவர்கள் வேலைக்கு வராவிட்டால் சம்பளம் இல்லை என்று கூறி பொதிகள் வழங்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் கே.குலமணி அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, அவர்களின் கேள்வி பிரதேச சபையினால் எந்த உதவியும் எங்களுக்கு செய்யவில்லை என்ற கோரிக்கையைத்தான் அவர்கள் முன்வைக்கின்றார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

உதவி என்பது பிரதேச சபையால் சகல ஊழியர்களுக்கும் ஒன்றாகத்தான் செய்யலாம். அவர்களுக்கு நாம் செய்யும் உதவி சம்பளம் கொடுக்கின்றோம். அரச சட்டப்படி வேலைக்கு வராவிட்டால் சம்பளம் கொடுக்க இயலாது. அந்த தொகையை எடுத்து நாம் பொதியாகவும் கொடுக்கலாம். சம்பளம் கொடுக்கவில்லை என்று ஒருவரும் பிழை பிடிக்க இயலாது.

**கௌரவ உறுப்பினர் கே.குலமணி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, உங்களது கருத்துப்படி சம்பளம் கொடுப்பதற்குரிய தீர்மானத்தையே எடுப்போம்.

**தீர்மானம் - 04/40/06**
முடக்கப்படும் பிரதேசங்களில் வாழும் சபையில் தொழில் புரியும் தற்காலிக ஊழியர்களுக்கு அந்தக் காலத்திற்குரிய கொடுப்பனவுகளை வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.குலமணி |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
துணைவிதிகள் தொடர்பாக கருத்துக்கள் கூறலாம்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, துணை விதிகளை பொருத்தமட்டில் அதற்குரிய அதிகாரம் தலைவரிடம் தான் உள்ளது. இதை நாம் 08 மாதத்திற்குள் துறை சார்ந்தவர்களிடம் அதை பிரித்துக் கொடுத்தால் ஒவ்வொருவரிடமும் கேள்வி கேட்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களே, நான் ஒரு காலமும் எவருக்கும் பிரித்துக் கொடுக்க தயங்கவில்லை. அவ்வாறு கொடுத்தவர்கள் கூட செயற்படுத்தவில்லை. நீங்கள் அப் பதவியில் இருந்து ஒரு சில விடயங்களில் இயங்குகிறீர்கள் இல்லை. உங்களுக்கு Road Inventory பாரம் தந்து அதை செயற்படுத்துகிறீர்கள் இல்லை.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, Road Inventory இற்கு ஒவ்வொரு பிரதேசத்தில் உள்ளவர்களின் ஒத்துழைப்பை நாடி இருக்கின்றோம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த சபையில் தன்னிச்சையாக நான் எதுவும் செய்ததில்லை. நான் அதை பகிரங்கமாக சொல்கின்றேன். எவ்வளவு மனக்கசப்புகள் இருந்தாலும், எவ்வளவு விமர்சனங்கள் இருந்தாலும் நான் அரவணைத்து போவதற்காகத்தான் இருக்கின்றேனே தவிர அப்படி நான் எதிலும் பாரபட்சம் காட்டவில்லை. யாருக்கு அதிகாரம் கொடுத்தாலும் பதில் சொல்ல வேண்டியவர் தவிசாளர். அதுதான் சட்டம். உப விதிகள் ஏற்றுக்கொள்ளாவிட்டால் ஒன்றும் செய்ய இயலாது. இறுதியில் கையொப்பம் செய்ய வேண்டியது தவிசாளர். உப தவிசாளருக்கு அதிகாரம் கொடுப்பதற்கு நான் தயார். ஆனால் அதை செயற்படுத்த வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, Road Inventory கஸ்டம் என்பது உங்களுக்கும் தெரியும். ஒருவரினது ஒத்துழைப்பும் இல்லாமல் எப்படி செய்வது? 06ம் வட்டாரம் மட்டும்தான் சரியாக இருக்கின்றது. கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்கள் சென்னல் கிராமத்தில் எவ்வளவோ வேலைகள் செய்திருக்கின்றார். எனக்கும் ஏதாவது வாய்ப்பு கிடைத்தால் சென்னல் கிராமம் - 02 இற்குதான் செய்வேன். இருக்கின்ற காலத்திற்குள் நாம் ஒற்றுமையாக செயற்பட வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் எவரும் பொறுப்பு எடுத்து செய்தால் கொடுப்பதற்கு தயார். ஆனால் அது நடக்க வேண்டும். துணைவிதிகளை நாம் எப்படியும் அங்கீகரிக்க வேண்டும். துணைவிதிகள் இல்லாமல் ஒன்றும் செய்ய இயலாது. அதிகாரம் தவிசாளருக்கு இருக்கக் கூடாது பகிர்ந்து தர வேண்டும் என்றால் சட்டத்தை மாற்ற இயலாது. உப தவிசாளருக்கு மட்டும்தான் அதிகாரம் கொடுக்கலாம். வேறொருவருக்கும் கொடுக்க இயலாது. குழுக்கள் அறிவுரை வழங்கலாம். சட்டத்தை ஒழுங்காக விளங்கிக் கொள்ள வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, துணைவிதிகளில் சில நடைமுறைப்படுத்த வேண்டிய வேலைகள் இருக்கின்றது. அதை உண்மையாக தவிசாளர், உப தவிசாளர் இல்லாமல் எமது சபையில் இருப்பவர்களிடமும் நீங்கள் நினைத்து கொடுக்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நினைத்து கொடுக்க இயலாது. அதற்காகத்தான் துணைவிதியை ஏற்றுக்கொள்வது. சட்டத்திற்கு மேலாக துணைவிதியின் படி குழு உருவாக்கலாம். அந்தக் குழுவில் இருந்து சிபார்சு செய்யலாம். அதற்காகத்தான் துணைவிதி.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஒவ்வொரு துணைவிதிக்கும் ஒவ்வொரு குழு நியமித்து கையளித்தோமானால் உங்களுக்கு இலகுவாக இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
என்னுடைய வேலையில் அக்கரையாக இருப்பதற்கு நான் நன்றி கூறுகின்றேன். நாம் செயற்படுத்துவோம். இந்த துணைவிதிகளை அங்கீகரித்ததாக எடுத்துக் கொள்வோம்.

**தீர்மானம் - 04/40/07**
சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகளை ஏற்றுக் கொள்வதற்கான பிரேரணை.

1. பொது இடங்களைத் தொற்று நீக்கம் செய்யும் ஏற்பாடுகள் தொடர்பான துணைவிதி.
2. பொதுச் சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளை முகாமைத்துவம் செய்வது மற்றும் கட்டுப்படுத்துவது தொடர்பான துணைவிதி.
3. பிரதேச சபையின் அங்காடி வியாபாரிகள் தொடர்பான துணைவிதி.
4. பிரதேச சபை வீதிகள் மற்றும் தெருக்களில் காட்சி நிகழ்ச்சிகளை நடத்துவதை கட்டுப்படுத்துவது தொர்பான துணைவிதி.
5. பொதுச் சுகாதாரத்திற்கு தீங்கு விளைவிக்கும் கழிவுகள் அகற்றப்படுவதை கட்டுப்படுத்துவது தொடர்பான துணைவிதி.
6. தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்பான துணைவிதி.
7. சந்தைகளுக்காக நியமிக்கப்பட்ட பொறுப்பாளர் மற்றும் ஏனைய பணியாளர்கள் உரிய செயற்பாடுகளை சரியாக நிறைவேற்றுவதற்கான உரிய விதிமுறைகள் பற்றிய துணைவிதி.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது நூலகங்களில் கற்றல் கற்பித்தல் சம்மந்தம் இல்லாமல் வெளியூர் ஆட்கள் வந்து அரட்டை அடிக்கின்ற இடமாக இருக்கின்றது. எமது ஊழியர்களாலும் அதை கட்டுப்படுத்த இயலாது. நாம் ஏதாவது கட்டுப்பாட்டு விதிமுறைகளை விதிக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வெளியாட்கள் வர இயலாது. அப்படியானால் நமது மாணவர்களுக்கு Student Registration ஒன்று கொடுக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்கள் ஒரு வேண்டுகோள் முன்வைத்தார். எமது வைத்தியசாலையில் Freezer Container எடுப்பதற்கு உதவி கேட்டு இருக்கின்றார்கள். இந்த உதவியை நாம் நேரடியாக செய்ய இயலாது. அதனால் நான் CLG இடம் Fax அனுப்பி கேட்டேன். அவர் சொன்னார் தற்போது இருக்கின்ற நிதி நிலமைகளுக்கு அது பொருத்தம் இல்லாமல் இருக்கும். இருப்பினும் ஆளுணரின் அனுமதி வேண்டும் என்று கூறினார். உத்தியோகபூர்வமாக ஆளுணரிடம் இருந்து ஏதாவது வரும் வரைக்கும் நமக்கு ஒன்றும் செய்ய இயலாமல் இருக்கும். ஆகக் குறைந்த செலவு 15 இலட்சத்தில் இருந்து 50 இலட்சம் வரை தேவைப்படும். தற்போது அந்த நிலை ஏற்படவில்லை. ஏற்பட்டாலும் என்ற ரீதியில் அதை அவர் முன்வைத்தார்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த விடயத்தில் நான் உண்மையாக குறுக்கிட்டதில் மன்னிக்க வேண்டும். வைத்தியசாலை சம்மாந்துறையை பொருத்தவரையில் இந்த Container இனை முக்கியத்துவப்படுத்துவது போன்று தற்போது கொரோனா நிலை அதிகரித்து காணப்படுவதாலும் கொரோனா நோயாளிகளை இங்கு Admit பண்ணி அதற்கான சிகிச்சை செய்வதற்கான எந்த வசதியும் இல்லாமல் Ventilator வசதி இல்லை, ICU Bed இல்லை, Operation Theater இல் Machine பழுதடைந்து திருத்தப்பட்டுள்ளது. இவைகளுக்குதான் முக்கியமாக நாம் முன்னுரிமை வழங்க வேண்டும். மக்கள் அவதிப்படுவதை நாங்கள் அங்கு வேலை செய்வதனால்தான் தெரிகின்றது. ஒரு நோயாளியை கொண்டுவந்த நேரம் ICU Bed இல்லாமல் Ventilator இல்லாமல் அண்மையில் வயோதிபர்களில் இருந்து வாலிபர்கள் வரை இவர்களை இடமாற்றுவதற்கு அந்தக் குடும்பத்தினர் தடுமாறுவதைப் பார்க்கும் போது மிகவும் கவலையாக இருக்கின்றது.

இலங்கையிலே 02வது இடத்தை வசிக்கின்ற மக்கள் தொகையுடைய சம்மாந்துறை பிரதேசத்தில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை இவ்வளவு காலத்தில் எவ்வளவு அரசியல்வாதிகள் இருந்தும் எவ்வளவோ முக்கியமான மகான்கள் இருந்தும் நம்பிக்கையாளர் சபை, உலமா சபைக்கு பணங்களை கொடுத்து வியாபார நடவடிக்கைகளுக்காக ஈடுபடச் செய்து தேவையற்ற விடயங்களில் கருத்திற் கொண்டும் இந்த சம்மாந்துறை வைத்தியசாலையில் ஒரு ICU Bed இல்லாமல், Ventilator இல்லாமல் இயங்கி வருவதை இட்டு மிகவும் மனவருத்தம் அடைகின்றேன். தற்போது இருக்கும் வைத்திய அதிகாரி தனது அற்பணிப்பை பொதுச் சேவை மனப்பாங்குடன் செய்து வருகிறார் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஏன் அக்கரைப்பற்று, நிந்தவூர் மற்ற இடங்களில் பெற்றுக் கொள்ளக்கூடிய இந்த வசதியை எங்களால் பெற்றுக் கொள்ள முடியாது?

ஆகவே தவிசாளர் என்ற வகையில் கேட்பது என்னவென்றால் இன்றைக்கு ஊருக்கு ஒரு தலைமகனாக நீங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றீர்கள். இதை கேட்டு பெறக்கூடிய தகுதி உங்களிடம் இருக்கின்றது. நீங்கள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர். வெளி இடத்தில் எல்லா தொடர்புகளையும் வைத்திருக்கின்றீர்கள். நீங்கள் எழுத்து மூலம் அறிக்கை சமர்ப்பித்து எங்களது நம்பிக்கையாளர் சபை, உலமா சபை அனைத்திற்கும் அறிவித்து, நானும் எத்தனையோ தடவை உங்களிடமும் தனியாகவும் தொலைபேசி மூலமும் அழைப்பு கொடுத்திருக்கின்றேன். ஒரு வாரமாக Operation Theater இயங்காததனால் மக்கள் பட்ட அவலம் அம்பாரையா, கல்முனையா, அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையா எங்கு செல்வது என்று தெரியாமல் தடுமாறி இருக்கின்றார்கள். இந்த தடுமாற்றத்தில் இருந்து எங்களது மக்களையும் பாதுகாத்து எங்களது வைத்தியசாலைக்கு அபிவிருத்திகளையும் மேன்படச் செய்ய வேண்டும் என்பதில் இந்த கவனத்தை ஈட்டுச் செல்கின்றேன். நாங்கள் ஒரு கௌரவ உறுப்பினராக இருந்தும் இவ்வாறான வேலையை செய்ய முடியாமல் இருப்பதை நினைத்து மிகவும் மனவேதனையடைகின்றோம். நாங்கள் எதைக் கேட்டாலும் கௌரவ உறுப்பினர் என்று, உண்மையிலே சொல்லப்போனால் எனது ஆதங்கம். இதுபோல் மற்றவர்களுக்கும்

இருக்கும். நான் வெளிக்காட்டுகின்றேன். பிரதேச சபை உறுப்பினர் என்று வருவதையிட்டு மிகவும் மன வேதனை அடைகின்றேன். ஏனென்றால் உறுப்பினர்களுக்கு எந்த மதிப்பும் மரியாதையும் இல்லை. ஒரு கௌரவ உறுப்பினர் நிற்கும் போது மற்றவர்களுக்குதான் மதிப்பு கொடுக்கின்றார்கள். சாதாரணமாக ஒருவருக்கு கொடுக்கின்ற மதிப்பு ஒரு உறுப்பினருக்கு இல்லை.

ஆகவே கௌரவ உறுப்பினர் என்ற பதவி தேவையா என்பதற்கும் ஒரு எடுகோளாக நான் ஒரு பிரேரணையை கொண்டு வருவதற்காகவும் இருக்கின்றேன். கௌரவ தவிசாளர் அவர்களே, இன்னும் சில காலங்கள் தான் இருக்கின்றது. அதில் நாங்கள் எல்லோரும் விட்டுச் செல்லலாம். உறுப்பினருக்கு கிடைக்காத மரியாதை பின்னுக்கு இந்த பிரதேச சபைக்கு வந்தால் கிடைக்குமா? என்ற கேள்விக்குறியும் எழுகின்றது. எனது ஆதங்கம் போல் எத்தனையோ பேருக்கு இருக்கலாம். இது தேவையா என்று என்னுபவர்கள் நினைத்துக் கொள்ளட்டும். ஆனால் உண்மையை வெளிக்காட்டுகின்றேன். உறுப்பினருக்கு கௌரவ உறுப்பினர்கள் கொடுக்காத மரியாதை ஒரு இடத்தை பார்த்துவிட்டு நேரில் சென்று இது பிழை என்று எழுத்து மூலம் கொடுத்த உறுப்பினர்களும் இருக்கின்றார்கள். இது தவிர்க்கப்பட வேண்டும். கௌரவ உறுப்பினர்களுக்கு மதிப்பளியுங்கள், உத்தியோகத்தர்களுக்கு மதிப்பளியுங்கள், எங்களது ஊரில் உள்ள சில விடயங்களுக்கு மதிப்பளியுங்கள். இதுதான் எனது வேண்டுகோள் என்பதை கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வைத்தியசாலைக்கு இந்த சமூகம் ஒன்றும் செய்யவில்லை என்று சொல்லுவது என்னைப் பொருத்தவரையில் தவறான கருத்து. மக்கள் ஒன்று சேர்ந்து கண் சிகிச்சை உபகரணங்கள் வாங்கிக் கொடுத்து இருக்கின்றோம். எல்லாவற்றையும் நாம் பூர்த்தி செய்ய முடியாது. நமது மாவட்டத்தின் நிலமை அது. அரசியல் ரீதியாக கல்முனையில் 02 வைத்தியசாலை, அக்கரைப்பற்றில் 01 உம், அம்பாரையில் 01 உம் இருக்கின்றது. மாவட்டத்திற்கே இருக்கக்கூடியது ஒன்றுதான். அதே போன்றுதான் Vaccine உம் ஒரு மாவட்டத்திற்கு ஒரு RDHS தான் இருக்கின்றது. ஆனால் அம்பாரையில் 02 இருக்கின்றது. 02 இருப்பதனால்தான் இந்தப் பிரச்சினை.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, Digital Board சம்மந்தமாக 06ம் மாதம் என்று கூறினீர்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அது தற்போது வழக்கு. வேறு வழியில்லை என்னையும் காப்பாற்ற வேண்டும். இந்த சபையையும் காப்பாற்ற வேண்டும் என்று வழக்கு வைத்திருக்கின்றது. வழக்கின் முடிவில் இருந்து தான் அது விடயம் தெரியவரும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, Body Container என்பது நான் வேண்டியது அல்ல. அதன் தேவை எனக்கு இல்லை. இது வைத்தியசாலை மூலமாக வந்தது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அது உங்கள் மூலமாக வந்தது அதை நான் பாராட்டுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
நான் தேடிப் போனது அம்பாரையில் நாங்கள் தான் சேர்ந்து வாங்கிக் கொடுப்பதாக இருந்தது. அது பற்றிய தொழில்நுட்ப அறிவுகளை வைத்திய அத்தியட்சகர் ஊடாக அறிய வேண்டும் என்றுதான் அந்த நேரத்தில் தான் வைத்திய அத்தியட்சகர் அவர்கள் இந்த கோரிக்கையை முன்வைத்தார். அதன் ஊடாகத்தான் எழுத்து மூலம் கேட்டு சபைக்கு சமர்ப்பித்தேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்களே, எதையும் நல்ல நோக்கத்தோடு செய்யும் போது விமர்சனங்கள் வரும். அதைப்பற்றி யோசிக்க தேவையில்லை.

**கௌரவ உறுப்பினர் கே.எம்.இன்பவதி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த 02 மாதங்களாக மல்வத்தையில் அலுமினியம் மின்கம்பங்களின் ஊடாக மின்னைப் பெற்று அப் பிரதேசம் மிகவும் ஒளியூட்டப்பட்ட நிலையில் காணப்பட்டது. தற்போது 02 வாரங்களாக 10 மின்கம்பங்கள் ஒளிராத பட்சத்தில் இருக்கின்றது. இது சம்மந்தமாக RDA Engineer இடம் கூறிய போது இதற்கான ஒப்பந்த வேலையை செய்தவர்கள் கொழும்பில் இருப்பதாக குறிப்பிடுகின்றார். ஒளிராத பகுதியில்தான் பல விபத்துக்கள் தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கின்றது. இதனை எங்களது சபையின் ஊடாக தொலைநகல் மூலம் அறிவித்து இதற்கான செயற்பாடுகளை செய்துதரும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்ததாக எங்களது புது வளத்தாப்பிட்டி பிரதேசம் முடக்கப்பட்டு இருக்கின்ற படியினால் வேலைத் தொழிலாளிகளுக்கு அவர்களுடைய சம்பளத்தை வழங்குவதாக கூறியிருந்தீர்கள். மிகவும் மனமகிழ்ச்சி அடைகின்றேன். இருந்தும் அங்கு இருக்கின்ற 15 வேலைத் தொழிலாளர்களுக்கும் எங்களது சபையின் ஊடாக ஒரு 1000.00 ரூபா பொதியாவது வழங்கி அவர்களை திருப்திப்படுத்துமாறு அன்போடு வேண்டிக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் எல்லோரும் என்னுடன் முரண்படுவீர்கள். ஆனால் நான் சொல்வது ஊழியர்கள் என்றால் எல்லோரும் ஊழியர்கள். நாம் அவர்களுக்கு வேலை செய்யாமலே சம்பளம் கொடுக்கின்றோம்.

**கௌரவ உறுப்பினர் கே.எம்.இன்பவதி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தற்போதய சூழ்நிலையில் நீண்ட நாட்களாக முடக்கப்பட்டு உணவு பெறுவதில் மிகவும் சிரமமாக இருக்கின்றார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதற்குதான் சம்பளம் கொடுக்கின்றோம்.

**கௌரவ உறுப்பினர் கே.எம்.இன்பவதி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மாதம் முடிவில்தான் சம்பளம் கிடைக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதை Advance ஆகவும் கொடுக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அவர்களுக்கு முழுக் கொடுப்பனவும் கொடுக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
முழுக் கொடுப்பனவும் வழங்கப்படும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மையவாடி அருகாமையில் இருக்கும் Reservation இனை இரவோடு இரவாக மதில் கட்டப்படுகின்றது. அதை சபை கண்மூடித்தனமாக பார்த்துக் கொண்டிருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சபை கண்மூடித்தனமாக பார்க்கின்றது இல்லை. அது நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குரியது. இந்த சபை கௌரவ உப தவிசாளர் அவர்களுக்கும் தெரியும் கிட்டத்தட்ட 08 வருடமாக அதைப்பற்றி எழுதி வருகின்றோம். உடனடியாக நான் சபை தீர்மானமாக எடுத்து அதை அனுப்புகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எல்லா சபை உறுப்பினர்களும் களவிஜயம் சென்று பார்த்தால் என்ன என்பது எனது கருத்து.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் ஜிப்ரி அவர்கள் கூறியது போன்று கிட்டத்தட்ட மஜீட்புரம் தொடக்கம் கைகாட்டி சந்தி வரைக்கும் 10Km உள்ள வாய்க்கால். இரு பக்கமும் பண்டு. சில்வாட இறக்கம் தொடக்கம் இஸ்மாயீல் வித்தியாலயம் வரைக்கும் பண்டு வாய்க்கால் இல்லை. அதற்கு இடைப்பட்ட பகுதியை வசதி படைத்தவர்கள் ஆக்கிரமிப்பு செய்கின்றார்கள். இது சம்மந்தாமக நீர்ப்பாசன எந்திரி அவர்களிடம் பேசிய போது அதில் Bund தயாரிக்க வேண்டும். உங்களது எல்லையை நிர்ணயம் செய்து தாருங்கள் என்று கேட்டதற்கு அமைவாக அதிகமானவர்கள் வழக்கு செய்திருக்கின்றார்கள். ஏற்கனவே மர்ஹூம் மஜீட் MP அவர்களால் அந்த காணிகளை எழுப்பி மாற்றுக் காணிகளும், வீடுகளும் கொடுக்கப்பட்டது. அவர்கள் என்னை அழைத்தார் எல்லையை காட்டுங்கள் என்று, நான் தவிசாளரையும், DS அவர்களையும் அழைத்து வருகின்றேன் என்றேன். அதற்கு பேமிட் இருக்கின்றதாம். நாம் DS இடம் கேட்க வேண்டும் பேமிட் இருக்கின்றதா? இல்லையா என்று. நாம் எல்லோரும் சேர்ந்து ஒரு தினத்தை தயார் செய்து எனக்கு அவசரமாக செய்து தந்தால் Bund போடுவதற்குரிய வேலையை செய்வேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த முயற்சி 12ம் ஆண்டில் இருந்து ஒவ்வொரு DDI உடனும் கதைத்து அமைச்சருக்கும் எழுதினேன். அமைச்சருக்கு கொண்டு செல்கின்ற கடிதத்தை கௌரவ பிரதித் தவிசாளரும் கொண்டு சென்றார். மஜீட்புரத்தில் இருந்து கைகாட்டி வரைக்கும் Reservation எல்லாவற்றையும் சபைக்கு பாரம் தாருங்கள் என்று, ஆனால் அது நடக்கவில்லை. முதல் இருந்த றிப்னாஸ் அவர்கள் வழக்கு வைத்திருந்தார். அது முடக்கப்பட்டு இன்று வசதிபடைத்தவர்கள் அத்துமீறி கட்டுமானம் செய்கின்றார்கள்.

## தீர்மானம் - 04/40/08

S வாய்க்காலின் ஒதுக்கு நிலங்களை தனியார் அபகரித்து கட்டுமான வேலைகளை செய்வதை பிரதேச சபை தலையிட்டு தீர்க்க வேண்டும் என்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம்.ஜிப்ரி |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இங்கு கௌரவ தவிசாளர், கௌரவ உறுப்பினர்கள் அனைவரினதும் கருத்துக்களை உள்வாங்கியவளாக, முதல் கண் எங்களுடைய தவிசாளர் அவர்களுக்கு நாம் நன்றி தெரிவிக்க வேண்டும். என்னவென்றால் இந்த ஊர் மக்களின் பேச்சுக்கள் அனைத்தையும் உள்வாங்கி 2011 ஆம் ஆண்டில் இருந்து இந்தப் பணத்தை சேமித்ததன் காரணமாக எங்களுடைய சம்மாந்துறை பிரதேச சபை ஒரு கடன் இல்லாத சபையாக இன்று இருக்கின்றது. அதன் பெருமை தவிசாளரைத்தான் சாரும் என்று கூறிக்கொண்டு, எங்களுடைய தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது எங்களுடைய நோக்கம். அது தேவையான இடத்திற்கு அந்த வேலைகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என்பது எங்களது அடுத்த நோக்கம். இங்கு கறுத்த வீதிக்கு அந்தப்பக்கம் கறுத்த வீதிக்கு இந்தப்பக்கம் வேலை செய்ய வேண்டும் என்பது இந்த சபையில் இருக்கக்கூடாது. நாங்கள் ஒரு குடும்பம். இந்தக் குடும்பம் சரியாகவும், சீராகவும் நடக்க வேண்டும். எங்கு அதிகமான தேவை இருக்கின்றதோ அங்கு செய்ய வேண்டும் என்பதனையும் நான் ஏற்றுக் கொள்கின்றேன்.

அடுத்த விடயம் சபையில் முதல் கேள்வி தொடுக்கப்பட்டது என்னவென்றால் கொவிட் - 19 காலத்தில் பயணத்தடை விதிக்கப்பட்டும் எங்களுடைய ஊர் மக்கள் பயணத்தடை இருந்தும் வெளியில் சென்று அதிகமான கொவிட் நோய்களை அதிகரிக்கின்றார்கள் என்ற கருத்தை எங்களுடைய கௌரவ தவிசாளர் அவர்கள் கூறினார்கள். அதை எவ்வாறு நாங்கள் தடை செய்ய வேண்டும். அதற்கு ஆலோசனைகள் உங்களிடம் இருந்தால் தாருங்கள் என்று கோரிக்கை இட்டு இந்த சபையில் எவரும் அதைப்பற்றி கதைக்கவில்லை. ஆனால் அதற்கு நாங்கள் முன்னுரிமை கொடுக்க வேண்டும். இந்த சபையில் ஏதேனும் ஆலோசனைகள் இருந்தால் கட்டாயமாக வழங்க

வேண்டும். நான் சொல்ல வேண்டியது என்னவென்றால், கடைகள் பயணத்தடை இருந்த போதும் மறைக்கப்பட்டு பிறருக்கு தெரியாமல் திறக்கப்பட்டு இருப்பதனால்தான் மக்கள் நினைத்த நேரம் பொருட்களை வாங்குவதற்காக வெளியில் செல்கின்றார்கள். அதை நாங்கள் தடை செய்ய வேண்டும். எமது பிரதேச சபை ஒரு குட்டிப் பாராளுமன்றம். எங்களாலும் பல திட்டங்களை செய்ய முடியும். நாங்கள் ஒவ்வொரு வட்டாரத்திலும் அல்லது ஒவ்வொரு GN Division இல் ஒரு கடை அல்லது இரண்டு கடைகளுக்கு அனுமதியை வழங்கி கடைகளை திறக்க வைக்கலாம். எல்லோரும் கடையை திறந்து இருப்பதனால்தான் ஒரே தடவையில் வாங்காமல் தரம் தரமாக பொருட்களை வாங்குகின்றார்கள்.

பொதுவாக பல இடங்களில் குழந்தைகள் அவர்களுக்கு முகக்கவசம் முக்கியமாக அணிய வேண்டும் என்ற விடயம் கூட இன்றுவரைக்கும் பெற்றோர்கள் அதற்குரிய விழிப்புணர்வை கொடுக்கவில்லை. சம்மாந்துறை – 07 ஐ எடுத்துக் கொண்டால் சில்லரை வியாபாரிகளிடம் பிள்ளைகள் முகக் கவசம் அணியாமல் பொருட்கள் வாங்குகின்றார்கள். Mobile Service இல் அல்லது எது வந்தாலும் எங்களுடைய சகோதரிகள் முகக்கவசம் அணியாமல் வந்து வாங்குகின்றார்கள். நான் ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு வியாபாரியிடம் சொன்னேன். நீங்கள் முகக்கவசத்தை கீழுக்கு அணியாமல் முகக்கவசத்தை அணிந்துதான் பொருட்களை விற்க வேண்டும் என்று சொன்னதற்கு அவர் கொவிட் பொய். அதை நம்பாதீர்கள். அல்லாஹ்வை நம்புங்கள். நாங்கள் முகக்கவசம் அணியமாட்டோம் நீங்கள் வாங்குவது என்றால் வாங்குங்கள் இல்லாவிட்டால் போங்கள் என்று சொல்லுகின்றார்கள். எனவே நாங்கள் எப்படி அவர்களுக்கு தெரிவிப்பது. நாம் ஒரு சேவையை பெண் என்று துணிந்து செய்தால் வாழ்த்து கூற வேண்டுமே தவிர வேறு கோணத்தில் சித்தரிக்கக்கூடாது.

அங்காடி வியாபாரிகளக்கு அனுமதி கிடைத்திருக்கின்றதா? இல்லையா? என்பதும் எங்களுக்கு தெரியாது. ஆனால் அவர்கள் எங்களுக்கே கதைக்கின்ற அளவுக்கு இருக்கின்றார்கள். நான் ஒரு தடவை மரக்கறி லொறி வந்த இடத்தில் அவர்களிடம் கூறினேன் மக்கள் முகக்கவசம் அணியாமல் வந்தால் நீங்கள் விற்கக்கூடாது என்று ஏசி அனுப்பி இருக்கின்றேன். இப்படியான விடயத்தை ஒரு இடத்தில் அல்லது 02 இடத்தில்தான் செய்யலாம். எல்லா இடத்திலும் எங்களால் செய்ய இயலாது. ஆகவே நாங்கள் இதற்கு ஏதாவது கடினமான தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்று கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப்லெப்பை அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, முதற்கண் தங்களது தாயின் மறைவிற்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தையும் சபை சார்பான அனுதாபத்தையும் சபை ஊடாக தெரிவித்துக் கொள்கின்றேன். எங்களது கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்கள் வைத்தியசாலைக்கு தேவைப்பட்ட முக்கியமான ஒரு பொருளை எடுப்பதற்கு எமது சபையின் உதவியை நாடி இருந்தார். அது நல்ல விடயம். எமது ஊருக்கு தேவைப்பட்ட ஒன்று. எமது வைத்தியசாலைக்கு தேவையான முக்கியமான பொருட்களை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக சம்மாந்துறையின் நிர்வாக முச்சபையின் ஊடாக ஏற்படுத்தப்பட்டிருந்த முயற்சியில் கௌரவ தவிசாளராக இருக்கின்ற தாங்கள் எவ்வாறு முனைப்புக்காட்டி செயற்பட்டீர்கள் என்பதனை நான் அறிந்தவனாக, ஏனென்றால் எங்களது வைத்தியசாலைக்கு தேவைதான் அவ்வாறு வைத்தியசாலைக்கு தேவைப்பட்ட உபகரணங்களை கௌரவ உறுப்பினர் சரீபா அவர்கள் பட்டியலிட்டும் காட்டினார். ஆனால் இந்த சபையின் நிதியினை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று சட்டரீதியான சட்டம் இருக்கின்றது. அதற்கு உட்பட்ட அடிப்படையில் செய்ய வேண்டியதை கண்டிப்பாக கௌரவ தவிசாளர் அவர்கள் செய்ய வேண்டும் என்பதுதான் எனது கோரிக்கை.

அதற்கு மேலாக இந்த மாவட்டத்தில் மக்களால் நிறுவப்பட்ட அரசாங்கம் இருக்கின்றது. கொவிட் இற்காக Fund ஒன்று இருக்கின்றது. அவ்வாறான நிலைகளில் அரசாங்கத்தின் நிதி மூலம் பெற்றுக் கொடுத்து இவ்வாறான குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டியது இந்த மாவட்டத்தின் வாக்களித்த மக்கள் அந்த மாவட்டத்தில் இருக்க வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கேட்க வேண்டிய ஒரு கடமை இருக்கின்றது. அதை மறந்துவிட்டு ஊர் மக்களிடம் பெற்றுக் கொள்கின்றவர்களிடம் இவ்வாறான தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்று எமது கௌரவ

உறுப்பினர்கள் கோரிக்கை வைப்பது வேடிக்கையான ஒரு நிகழ்வாகவும் இருக்கின்றது. ஆகவே இவ்வாறான அரசாங்கத்தால் செய்யக்கூடிய பெரும் நிதி மூலம் செய்யக்கூடிய செலவுகளை எல்லாம் நாங்கள் தலையில் அள்ளிப்போடக்கூடிய அவசியம் இல்லை. அவ்வாறான தேவைப்பாடுகளை இந்த உயர் சபை செய்யக்கூடிய அவசியம் இல்லை. எமது மாவட்டத்தில் 5, 6 பேர் இருக்கின்றார்கள் அவர்களுக்கு எங்களது ஊர் மக்கள் வாக்களித்து இருக்கின்றார்கள். அதனால் எங்களது ஊர் மக்கள் பிரதிநிதித்துவத்தை இழந்து இருக்கின்றது. அவ்வாறானவர்களிடம் கேட்பது ஒரு நியாயமாக இருக்கும். கௌரவ உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து அவர்களிடம் கேட்பது சிறப்பாக இருக்கும் என நான் கருதுகின்றேன்.

அடுத்ததாக பாராளுமன்ற உறுப்பினர் இல்லாத இந்த ஊருக்கு இன்று கௌரவ தவிசாளர் அவர்கள் எல்லாவற்றையும் பொறுப்பெடுத்து செய்யக்கூடியவர் என்ற அடிப்படையில் தாங்கள் அதை மேற்கொள்கின்றீர்கள். இருந்தாலும் எங்களது செயற்பாட்டை விரிவுபடுத்தி தீவிரப்படுத்த வேண்டிய குறைபாடு தென்படுகின்றது. ஆகவே அதனை தாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பது எனது தயவான கோரிக்கை. கொவிட் காலத்தில்கூட மக்களுக்கு அத்தியவசியமான பிரயாணம் செய்வதற்கு அரசாங்கம் அனுமதித்து இருக்கின்றது. ஒரு நபர் தன்னுடைய பிள்ளைக்கு Pembers வாங்குவதற்கு Pharmacy இற்கு சென்றவரிடம் சகல ஆவணங்கள் இருந்தும் அந்த நபரிடம் போக்குவரத்து பொலிசார் சைக்கிளை பறித்துக் கொண்டு சென்றுவிட்டார். ஆகவே அவர்களிடம் சென்று பேசியவுடன் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏதாவது ஒரு ஏற்பாட்டை செய்துவிட்டு வரலாம் என்றும் பார்த்தார் 5000.00 ரூபா கொடுப்பதற்கு விருப்பம் ஆனால் அவர்கள் 20,000.00 ரூபா தாருங்கள் என்று அந்த அளவுக்கு பேரன் பேசுகின்ற நிலைப்பாடும் சட்டத்தை பாதுகாப்பவர்களிடம் நடந்து கொண்டிருக்கின்றது.

நேற்று இரவு 10.30 மணியளவில் எனது வீட்டிற்கு அருகாமையில் நடந்த ஒரு சம்பவம். பைசிக்கிளில் வந்தவர்களை பிடித்து நீண்ட நேரமாக பேசி அவர்களது சமரசம் சரியாகவில்லை. அந்த நிலையில் கதைத்துக்கு இருந்தவர்களில் ஒருவர் Motor Traffic இன் பைசிக்கிள் திறப்பை பிடுங்கி எடுத்துவிட்டு ஓடிவிட்டார். Motor Traffic இற்கு அவர்களை பிடிப்பதற்கு பைசிக்கிள் இல்லை. 2, 3 வீட்டுக்கு அப்பால் ஒருவரிடம் இருந்து பைசிக்கிள் வாங்கி எடுத்து அவர்களை எங்கு தேடுவது. இதுதான் நிலை. அரசாங்கம் மக்களுக்கு சௌகரியங்களை பிரச்சினைகள் இல்லாத அளவுக்கு முன்னெடுக்கின்றது. இதே நேரத்தில் பாதுகாக்கின்றவர்களே சில இடங்களில் சட்டத்தை மீறுகின்றார்கள். இந்த அடிப்படையில் இந்த விடயங்களில் உண்மைகளை விளங்கி இவ்வாறான அசௌகரியங்கள் மக்களுக்கு ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதனை சூசகமான முறையில் கௌரவ தவிசாளர் அவர்கள் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளிடம் தெரிவிப்பது சிறப்பாக இருக்கும். நிலையப் பொறுப்பதிகாரி சொல்லியும் அது கொடுக்கவில்லை. இன்றுதான் நீதிமன்றத்தில் கொடுக்கப்படுகின்றது.

அங்காடி வியாபாரிகள் உண்மையிலே கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் கூறினார். அதிலும் மீன் சந்தையில் இருந்துதான் கொரோனா உருவானது. அதே மாதிரி ஒரு மீன் சந்தைதான் மாளிகைக்காட்டில் இருக்கின்றது. மீன் வியாபாரிகள் அவர்களுக்கு விரும்பிய படி எல்லா இடங்களிலும் செல்கின்றார்கள். அதே நேரத்தில் அங்காடி வியாபாரிகள் எந்தக்கட்டுப்பாடுகளும் இல்லாமல் இருக்கின்றார்கள். எனது ஆலோசனை என்னவென்றால் காரைதீவு பிரதேச சபை அதனை முன்னெடுக்கின்றது. எந்த அடிப்படையில் என்றால் இந்த ஊருக்குள் வருகின்ற மீன் வியாபாரிகளில் குறிக்கப்பட்ட வியாபாரிகளை மாத்திரம் சுற்ற விடுவது. அதே மாதிரி அங்காடி வியாபாரங்களை செய்ய வேண்டும். 2021.04.21 ஆம் திகதியில் இருந்து இன்று வரை பிரயாணத்தடை நடந்து கொண்டிருக்கின்றது. மக்கள் வீட்டிற்குள் இருக்கின்ற நேரத்தில் இவர்கள் சாப்பாட்டுக்கு தேவைப்பட்ட பொருட்களை எவ்வாறு எடுத்துக் கொள்வது. ஆகவே அவைகளையும் உணர்ந்து சுமூகமான நிலையை மக்களுக்கு பிரச்சினைகளை ஏற்படுத்தாமல் எமது சபை ஊடாக செயற்படுத்த வேண்டும் என்று தயவாய் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

பயணக்கட்டுப்பாடு இருப்பது நமது பாதுகாப்பிற்காக. அத்தியவசிய தேவைகளை தவிர வேறு ஏதாவதற்கு வெளியாகும் போது இந்தப் பிரச்சினை ஏற்படுகின்றது. சட்டத்தை மீறிவிட்டு நியாயம்

பேச முடியாது. நியாயம் பேசுவதில் பிரயோசனம் இல்லை. சட்டத்தை முன்வைத்து இந்த சட்டத்தின் படி இவ்வளவு தண்டம் இதுதான் சட்டம். சமைப்பதற்கு உப்பு இல்லை என்றால் உப்பு வாங்குவதற்கு நாம் வெளியே வரக்கூடாது. உப்பு இல்லாமல் சாப்பிட வேண்டும். அதுதான் கட்டுப்பாடு. நடமாடும் வியாபாரிகள் எல்லோருக்கும் Antigen Test செய்யப்பட்டு இருக்கின்றது. அவர்களிடம் இருந்து எம்மை பாதுகாப்பதற்கு நாம் முகக்கவசம் அணிந்து செல்ல வேண்டும். தயவு செய்து உங்களுக்கு இயலுமான வரை இதில் உதவுங்கள் என்று கேட்டு, சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

A.M.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
சம்மாந்துறை.

**தீர்மானம் - 04/40/10**

2021 – 2024 ஆண்டு காலப்பகுதியில் நடைபெறவிருக்கின்ற அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் 01, 02, 03, 04 ஆவது வருடங்களில் கீழ்வரும் வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கான பிரேரணை.

1. சிறுவர் பூங்கா அமைத்தல். (வீரமுனை – 01)
2. பழைய சந்தைக் கட்டடத்தில் கேளிக்கை பூங்கா (Amusement Park) அமைத்தல். (சம்மாந்துறை – 05)
3. பொது விளையாட்டு மைதானம் அமைத்தல் (வீரமுனை – 04)
4. கலாசார மண்டபம் அமைத்தல் (மல்வத்தை – 01)

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.